புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# அம்பையின் சிறுகதை இலக்கியத்தில் பெண்ணிய நோக்கு

ரா.பார்த்திமா பரினா,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப
உயர் ஆராய்ச்சி நிறுவனம்,
பல்லாவரம், சென்னை – 117.

*முன்னுரை :*

*நவீன தமிழிலக்கிய வரலாற்றில் படைப்பிலக்கியங்கள் மூலம் சமூகத்தில் பெண்களின் விடுதலைக்காகவும் அவர்களின் வலுவான ஆளுமை விருத்திக்காகவும் பெண்ணியக் குரலை உயர்த்திக் காட்டிய எழுத்தாளரான அம்பையின் சிறுகதைகள் மூலம் பெண்ணின் இருப்பும்,அடையாளமும் இவற்றின் ஊடாக பெண்ணிய கருத்தாக்க சிந்தனைகளை வெளிப்படுத்திக் கூறுவதும் இவ் ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.*

*'அம்பை '*

*1944 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் கோவையில் பிறந்த சிஎஸ் லட்சுமி (அம்பை) தமிழில் புகழ்பெற்ற புனைகதை எழுத்தாளர் ஆவார். அவரது படைப்புகள் பெண்களுக்கான காரணத்தை உணர்ச்சிவசப்பட வைத்தல், நகைச்சுவை, தெளிவான மற்றும் ஆழமான நடை மற்றும் யதார்த்தத்தின் தொடுதல் ஆகியவற்றால் வகைப்படுத்தப்படுகின்றன. இன்று தமிழ் எழுத்தாளர்களில் முக்கியமானவர். அமித் சௌத்ரியால் திருத்தப்பட்டு சமீபத்தில் வெளியிடப்பட்ட நவீன இந்திய இலக்கியத்தின் பிக்காடர் புத்தகத்தில் இடம் பெற்ற ஒரே தமிழ் எழுத்தாளர் இவர்தான். அவரது பெரும்பாலான கதைகள் உறவுகளைப் பற்றியவை மற்றும் அவை சமகால வாழ்க்கையைப் பற்றிய அற்புதமான அவதானிப்புகளைக் கொண்டுள்ளன.*

*பெண்கல்வி, பெண் விடுதலைக்கான குரல்கள் தமிழில் நவீன இலக்கியம் தோன்றிய காலம் முதலே இருந்து வருகின்றன. வை.மு.கோதைநாயகி அம்மாள் முதல் தொடர்ச்சியாக பெண் எழுத்தாளர்கள் எழுதி வருகிறார்கள்.பெண்ணியக் கொள்கைகள் பற்றிய புரிதலுடன், உலகளாவிய வரலாற்று அணுகுமுறையுடன் பெண்விடுதலை பற்றி தமிழில் பேசியவர் அம்பை. களச்செயல்பாட்டளராகவும், பெண்விடுதலைக்காகப் பணியாற்றியவர்.*

*தமிழ் பெண் எழுத்தாளர்களின் பொது பிம்பத்திலிருந்து வெகுவாக விலகி, வேறுபட்டு கூர்மையான, சமூக பெண்ணிய சிந்தனையுடன் கடந்த 40 ஆண்டுகளாக எழுதிவரும் எழுத்தாளர் அம்பை. இவர் ஒரு பெண் எழுத்தாளர் மட்டுமல்ல ,தீவிரமான ஒரு சமூக செயற்பாட்டாளரும் கூட. தமிழ் நவீன பெண் இலக்கியத்தில் அம்பையின் தடம் அழுத்தமானது. பெண்களின் வாழ்க்கையை அதுவும் சுய சிந்தனை கொண்ட படித்த பெண்களை தனது கதாபாத்திரங்களாக மிக இயல்பாக படைத்தவர். எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பிரச்சனைகளை கொண்ட பெண்களின் வாழ்வையும் , எல்லை கடந்த நிலப்பகுதிகளையும் களமாக கொண்டது இவரது கதைகள். பெண்களின் உறவு சிக்கல்கள், பிரச்சினைகள், குழப்பங்கள், கோபதாபங்கள், சமரசங்கள் யாவும் கிண்டலான தொனியில் மிகவும் ரசிக்கும்படியாக இவரது படைப்புகளில் வெளிப்படுகின்றன .*

*பெங்களூரில் தன் பாட்டியின் கவனிப்பில் வளர்ந்து வந்த ஒரு பள்ளிச் சிறுமி தமிழில் நானும் கதை எழுதுகிறேன் என்று மற்ற பெண் எழுத்தாளர்களைப் போலவே கதைகளை எழுதத் தொடங்கியபோது தனக்குத்தானே சூட்டிக்கொண்ட பெயர்தான் அம்பை.*

*அம்பையின் சிறுகதையில் பாத்திரப்படைப்புகள்*

*அம்பையின் எழுத்தில் இடம்பெறும் பாத்திரப்படைப்புகள் உலகக் அரங்கில் தமிழ் பேசும் சூழலில் உள்ளவர்கள் மட்டுமே அல்ல. பர்மிங்காமில் வாழும் பெண்களும் ,பம்பாய் குடிசை பகுதிகளில் வாழும் தொழிற்சங்கத்தினரும், ராஜஸ்தான் மாநிலத்தின் ஒரு கோடியில் வாழும் கிராமத்து பெண்களும், தமிழ்நாட்டின் தென்கோடியில் தாமிரபரணி ஆற்றின் கரையில் இருக்கும் ஒரு அமைதியான கிராமத்து பெண்களும் அவர் கதையில் இடம் பெறுகிறார்கள்.*

*மும்பையில் வசித்து வந்தாலும் தன்னுடைய கதைகளில் தெற்கத்திய வாழ்க்கையை இன்றளவும் நுணுக்கமாகச் சித்தரித்து வருபவர். பெண்கள் சீட்டில் அமர்ந்த ஆணைத் தட்டிக் கேட்க முடியாத பெண், விருந்தாளியை வழியனுப்பும் போது கதவிடுக்கில் முகம் காட்டும் பெண், தன் வாழ்க்கையில் ஒரு இலடசத்து எழுபதாயிரம் தோசைகளை வார்த்தெடுத்து விட்டு செத்துப் போன பெண்..... என பெண்களின் தற்போதைய பிரச்சனைகள் அனைத்தையும் தன்னுடைய படைப்புகளின் வழியாக எடுத்துக் காட்டியவர்.*

*வீட்டின் மூலையில் ஒரு சமையலறை என்ற சிறுகதையில் அம்பை அவர்கள் ''சிலர் தம் மீது அடிமை போன்று சுமத்தப்பட்டிருக்கும் வேலைச் சுமையை பெருமிதத்தோடு எடுத்துக்கொள்கிறார்கள். அவர்கள் கையில் ஒரு சாவி கொத்து கிடைத்து விட்டால் அதுதான் அவர்கள் வாழ்க்கையின் சிகர சாதனை , அங்கீகாரம், சமையலறையில் அவர்களுக்கு அளிக்கப்படும் பூரண அதிகாரத்தின் சின்னம் என்று எண்ணுகிறார்கள்''என்று பெண்ணடிமைத்தனம் குறித்து குறிப்பிட்டிருப்பார்.*

*வெளிநாட்டு அகதிகள் என்ற கதையில் அம்பை அவர்கள் ''சிலர் தம் மீது செய்யப்படும் அன்பையும் தன் பாதுகாப்புக்காக தன்மீது கட்டப்பட்டிருக்கும் தளைகளையும் மிக சந்தோஷத்துடன் அனுபவிக்கின்றனர்'' என்று எழுதி இருப்பார். இவரது சந்திரா என்ற சிறுகதையில் சில பயங்கரவாதிகள் எவ்வாறு வேட்டையாடப்படுகின்றனர் என்றும் குறிப்பிட்டு இருப்பார்.*

*''அம்மா ஒரு கொலை செய்தாள்'' ஒரு தாய்க்கு தன் மகளுக்கு திருமணம் செய்து வைத்து தன் சுமையைக் குறைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் அந்த எண்ணம் சுலபத்தில் நிறைவேறாத முடியாதபடி அந்த பெண்ணின் கருப்பு நிறம் தடையாக இருக்கும். கருப்பு நிறம் கொண்ட திருமண சந்தையில் விரைவில் விலைபோகாத மகள் விரைவில் பூப்பெய்தியதை அன்பாக அரவணைக்க வேண்டிய இடத்தில் ''அதற்குள் என்ன அவசரம் '' என்று வெறுப்பை உமிழ வைக்கும் சமூகத்தை அழுத்தமாக படைத்திருப்பார். இவ்வாறாக சமூகத்தில் தான் கண்ணியத்துடனும்,கவனத்துடன் வாழும் உரிமை மறுக்கப்படும், ஒரு தனிமனிதராக அடைபட்டு கிடக்கும் காலத்தையும் இடத்தையும் சூழலையும் விலக்கிப் பார்த்தால் அவரது எழுத்தின் அடிநாதம் காலம் காலமாக உலகமெங்கும் காணும் பெண்களுக்கெதிரான அடக்குமுறைக்கு எதிரான ஒரு குரல் தான் அம்பையுடையது.*

*அம்பையின் சிறுகதையில் ஆண் - பெண் உறவு*

*நமது அன்றாட உலகம், அதன் சடங்குகள், வீட்டின், சமையலறையின் அமைப்பு எந்தளவுக்கு பெண்களுக்கு எதிராக இருக்கிறது எனக் காட்டுவதில் நிறைய வேலைப்பாடுகள் கொண்ட ஒரு சித்திரத்தை போன்று இருக்கின்றன அம்பையின் கதைகள். அதாவது அவரது கதைகளை நீங்கள் ஒரு முடிவை, உணர்வெழுச்சியை நோக்கி செல்லுகிற படைப்பாக மட்டும் அல்லாமல், ஒவ்வொரு பத்தியாக, அதில் வருகிற நுட்பமான குறிப்புகளைக் கொண்டு விவாதிக்க முடியும். அந்தளவுக்கு கலைநுட்பமும் அரசியலும் பொதிந்த எழுத்து அவருடையது. சிவசங்கரி, அனுராதா ரமணன் போன்ற வெகுஜன கதையாசிரியர்களுக்கும் அம்பைக்குமான முக்கிய வித்தியாசமே இந்த அரசியல் தான். அம்பையின் கதைகளில் ஆண்-பெண் உறவை ரொமாண்டிசைஸ் பண்ணுகிற முனைப்பே இராது. முதல் வரியில் இருந்தே பால்நிலையின் அரசியல் ஆரம்பித்து விடும். பெண்களைத் தவிர அவர் யாரையும் மகத்துவப்படுத்துவதும் இல்லை. அவருடைய கோயிலில் ஒரே ஒரு தெய்வம் தான் - அது பெண். பெண் தெய்வம் பிரதிஷ்டை செய்யப்பட்டதனால் மட்டுமே அங்கு மரியாதையுடன் வரும் ஆண் பக்தர்கள், அதைச் சுற்றியுள்ள குடும்ப அமைப்பு, குடும்ப அமைப்பின் மீது உருவாகியுள்ள சமூக அமைப்புகள் மீது அவரெழுத்தில் முற்றிலும் மாறுபட்ட சிந்தனை வெளிப்படும்.*

*வன்முறை என்பது அடித்து நொறுக்குவது மட்டுமே என்று ஒற்றைத் தன்மையுடன் புரிந்துகொண்டிருந்த மனங்களில், நுட்பமான வன்முறையின் வடிவங்களைத் தெளிவுபடுத்தினார் அம்பை. காலந்தோறும் பெண்கள் அடைந்திருக்கும் மாற்றங்களைச் சொல்லிக்கொண்டு அவர்கள் மீதான வன்முறைகளையும் அடக்குமுறைகளையும் பதிவுசெய்தார். வன்முறையை ஆண்தான் நிகழ்த்த வேண்டும் என்பதில்லை; பெண்ணின் வழியாகச் செயல்படுத்தப்படும் வன்முறையையும் அவர் சுட்டிக்காட்டினார். குடும்ப அமைப்புக்குள் குழந்தைகள் மீது நிகழ்த்தப்படும் பாலியல் வன்முறையைக் கவனப்படுத்தும்விதத்தில் அம்பை எழுதிய 'மைமல் பொழுது' (அந்தேரி மேம்பாலத்தில் ஒரு சந்திப்பு) குடும்ப கௌரவத்தின் பெயரால் நாம் இழைக்கிற அநீதியைக் கவனப்படுத்தியது. மூப்பின் காரணமாக ஒருவரைப் புறக்கணிப்பதும் கைவிடுவதும் வன்முறைதான் என்பதையும் சுட்டிக்காட்ட அம்பை தவறவில்லை. பெண்ணின் உடல் மீது ஏற்றிவைக்கப்பட்டிருக்கும் சுமைகளைப் புனைவாக மட்டுமல்லாமல் கட்டுரையாகளாகவும் பதிவுசெய்திருக்கிறார்.*

*பெண்கல்வி, பெண் விடுதலைக்கான குரல்கள் தமிழில் நவீன இலக்கியம் தோன்றிய காலம் முதலே இருந்து வருகின்றன. வை.மு.கோதைநாயகி அம்மாள் முதல் தொடர்ச்சியாக பெண் எழுத்தாளர்கள் எழுதி வருகிறார்கள்.பெண்ணியக் கொள்கைகள் பற்றிய புரிதலுடன், உலகளாவிய வரலாற்று அணுகுமுறையுடன் பெண்விடுதலை பற்றி தமிழில் பேசியவர் அம்பை. களச்செயல்பாட்டாளராகவும், பெண்விடுதலைக்காகப் பணியாற்றியவர்.*

*சிறுகதைத் தொகுப்புகள்*

*சிறகுகள் முறியும் (1976), அம்மா ஒரு கொலை செய்தாள், வீட்டின் மூலையில் ஓர் சமையல் அறை (1988), காட்டில் ஒரு மான் (2000), சக்கர நாற்காலி, ஸஞ்சாரி, வற்றும் ஏரியின் மீன்கள் (2007), ஸாரஸ் பறவை ஒன்றின் மரணம் - சுதா குப்தாவின் துப்பறியும் அனுபவங்கள் ஒரு கறுப்புச் சிலந்தியுடன் ஓர் இரவு, சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை (சாகித்ய அகாடெமி விருது) உள்ளிட்டவை பெண்களின் வாழ்க்கையில் உள்ள சமூக ஆதிக்கம், கருத்தியல் ஆதிக்கத்தையே முதன்மை பேசுபொருளாக அம்பை கொண்டிருக்கிறார். அம்பையின் ஆய்வுகள் இரண்டு களங்களைச் சார்ந்தவை . சமூகவியல், இலக்கியம். அம்பை சி. எஸ். லக்ஷ்மி என்ற தன்னுடைய இயற்பெயரில் தி இந்து, தி எக்னாமிக்ஸ் அண்ட் பொலிடிக்கல் வீக்லி, தி டைம்ஸ் ஆஃப் இந்தியா போன்ற ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு சமூகவியல் கட்டுரைகள் எழுதி வருகிறார். பெண் இசைக்கலைஞர்கள், பெண் நடனக்கலைஞர்கள் பற்றிய அவருடைய ஆய்வுப்பதிவுகள் முக்கியமானவை.*

*தற்போது ஸ்பாரோ அறக்கட்டளையின் வழியாகப் பல ஆக்கப்பூர்வமான பணிகளைச் செய்து வருகிறார். இந்த அறக்கட்டளை பயிலரங்குகள், குறும்படங்கள் தயாரிப்பு என பெண்களின் இயங்கு தளத்தைக் காத்திரமாக விரித்து வருகிறது. அரசியல், அறிவியல், சுதந்திரப் போராட்டம், கலையிலக்கியம், தலித் இயக்கங்கள் என சாத்தியமுள்ள அத்தனை தளங்களிலும் நிகழ்ந்த பெண்களின் பங்களிப்புகளை ஆவணமாகத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். பெண்ணியம் தொடர்பாகப் பல கட்டுரைகளைத் தமிழ், ஆங்கிலம் என இரு மொழிகளிலும் எழுதி வருகிறார். 'தமிழ்ப் புனைவுலகில் பெண்களின் குரல்' என்ற இவருடைய ஆய்வுக் கட்டுரை மிகச் சிறந்த ஒன்றாக அனைவராலும் கருதப்படுகிறது.*

*முடிவுரை*

*அம்பைக்கு முன்னும் பின்னும் பெண்கள் பலர் எழுதாமல் இல்லை. ஆனால், அம்பை எல்லாவற்றிலுமிருந்து விலகித் தனித்துவப் பாதையைத் தேர்ந்துகொண்டவர். பெண்களைப் பற்றியும் குடும்பத்துக்குள் பெண்களின் இருப்புப் பற்றியும் சிலர் எழுதிக் கடந்த நிலையில் அம்பையும் அதைத்தான் கைகொண்டார். ஆனால், பார்வை வேறு; கோணம் வேறு. அறுபதுகளின் பின்பகுதியில் பெண்களுக்குப் திடிரென்று விடியல் வாய்த்துவிடவில்லை. சமையல் குறிப்புகளை எழுதுவதும் குடும்பச் சித்திரங்களை வாசிப்பதும் பெரும் சாதனையாகக் கருதப்பட வேண்டிய சூழலில்தான் சி.எஸ். லஷ்மி, அம்பையாக மாறிய வெளிப்பாடு நிகழ்ந்தது. குடும்பச் சித்திரங்களுக்குள் புதைந்திருந்த பிற்போக்குத்தனத்தைச் சுட்டிக்காட்டியவர்களும் அதில் மீறலை நிகழ்த்தியவர்களும் உண்டுதான் என்கிறபோதும் நவீன இலக்கியத்தில் அம்பை நிகழ்த்திய உடைப்பு முக்கியமானது.*

*பார்வை நூல்கள்*

1. *பார்த்திமா சூசைமணி, தமிழ்ப் புனைகதைகளில் உளவியல், உலகத் தமிழாராச்சி நிறுவனம், தரமணி, சென்னை – 600113, முதற்பதிப்பு : 2007.*
2. *கலைவாதி, பெண்களும் தொடர்பு ஊடகங்களும், முஸ்லிம் மாதர் ஆராய்ச்சி செயல் முன்ன்னி, 159, கின்ஷி வீதி, கொழும்பு – 8, முதற்பதிப்பு – 1991.*
3. *சுசிலா.எம் ஏ, தமிழிலக்கிய வெளியில் பெண்மொழியும் பெண்ணும், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, முதற்பதிப்பு -2006.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********